(பதிப்புரிமையுடையது)

உ

சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு

அகில இலங்கை



10 சைவசமய பாடப்பரீட்சை : 2020

தரம் பத்து

nselva.com

காலம் அளவு	2.30 மணி

புள்ளிகள் : 100

இல.	
மாணவர் சுட்டெண்:	

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. கலைகளின் அதிதேவதை.
   1. நடராஜர் 2. காயத்திரி 3. சரஸ்வதி 4. ஆதிலட்சுமி
2. அதிகாலை எழுந்து எண்ணெய் வைத்து நீராடி கொண்டாடும் பண்டிகை.
   1. புதுவருடம் 2. தீபாவளி
   3. தசரா 4. தைப்பொங்கல்
3. ''ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லார்க்கு'' என்ற பாடல் இடம்பெறுவது.
   1. தேவாரம் 2. திருவிசைப்பா
   3. திருவாசகம் 4. திருப்புகழ்
4. ''திங்கள்'' என்ற சொற்றொடர் குறிப்பிடுவது.
   1. சூரியன் 2. சந்திரன் 3. சிவபெருமான் 4. மீனராசி
5. துவாரகாபுரியில் அவதரித்தவர்.
   1. குசேலர் 2. கிருஷ்ணர்
   3. தருமன் 4. கேதாரகௌரி
6. வசிட்ட மாமுனிவரின் மனைவி
   1. அகலிகை 2. கண்ணகி 3. அருந்ததி 4. சாவித்திரி
7. ஏழாம் நாள் காலையில் பாரணையுடன் நிறைவு பெறும் விரதம்.
   1. ஏகாதசி 2. விநாயக சதுர்த்தி
   3. கந்தசஷ்டி 4. கேதாரகௌரி
8. ஆன்மாக்களை மலபந்தத்திலிருந்து முற்றாக நீக்கி அவற்றுக்குப் பேரின்பத்தைக் கொடுப்பது.
   1. படைத்தல் 2. காத்தல்
   3. அருளல் 4. அழித்தல்
9. ''அரிது அரிது மானிடராதல் அரிது'' என்று கூறியவர்.
   1. பாரதியார் 2. இளங்கோவடிகள்
   3. ஔவையார் 4. மாணிக்கவாசகர்
10. சக்தியை முழு முதற் கடவுளாகப் போற்றுவது.
    1. வைணவம் 2. சாக்தம் 3. காணாபத்தியம் 4. கௌமாரம்

11. இசையோடு கூடிய பாடல்களைக் கொண்ட வேதம்
1. இருக்கு 2. யசுர் 3. சாமம் 4. அதர்வணம்

12. மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை என்ற நூல் அடங்கும் திருமுறை.
1. 09 2. 10 3. 11 4. 12

13. மகா விஷ்ணுவின் நாயகி
1. லட்சுமி 2. சரஸ்வதி 3. பார்வதி 4. வராகி

14. பிரமபுரம் என அழைக்கப்படும் தலம்.
1. சிதம்பரம் 2. சீர்காழி 3. திருச்செந்தூர் 4. நல்லூர்

15. ''அந்தணாளன் உன் அடைக்கலம்'' என்ற பாடலின் பண்
1. தக்கேசி 2. செந்துருத்தி
3. பழம்பஞ்சுரம் 4. நட்டபாடை

16. வியாக்கிரபாதர் முனிவரின் மகன்
1. தூமகேது 2. சண்டேசுவரர் 3. உபமன்யு 4. அபிமன்யு

17. ''அங்கமும் வேதமும்'' என்ற திருப்பாடலை பாடியவர்.
1. அப்பர் 2. சுந்தரர்
3. ஞான சம்பந்தர் 4. கல்லாடனர்

18. நம்பியாண்டார் நம்பி அருளியது.
1. கோயில் திருப்பண்ணியர் திருவிருத்தம் 2. திருமுகப் பாசுரம்
3. திருக்கயிலாய ஞான உலா 4. திருவந்தாதி

19. புகழனாருக்கும் மாதினியாருக்கும் புதல்வியாகப் பிறந்தவர்.
1. கண்ணகி 2. புனிதவதியார் 3. திலகவதியார் 4. மங்கையர்க்கரசி

20. இறைவன் கொண்டருளிய வடிவங்களின் எண்ணிக்கை
1. 108 2. 64 3. 71 4. 63

21. தன் தந்தையின் யாகம் சிறப்புற பொன் வேண்டி சம்பந்தர் பாடிய பதிகம்.
1. ''சடையாயெனுமால்'' 2. ''இடரினும் தளரினும்''
3. ''பாலுக்குப் பாலகன்'' 4. ''துஞ்சலும் துஞ்சல்''

22. அருணந்தி சிவாச்சாரியாரின் சிறப்புப்பெயர்.
1. முத்தமிழ் வித்தகர் 2. ஞான பண்டிதர்
3. சகலாகம பண்டிதர் 4. மெய்கண்ட தேவர்

23. சுவாமி விபுலானந்தர் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட ஆண்டு.
1. 1899 2. 1920 3. 1930 4. 1946

24. மகாபாரதம் என்னும் இதிகாசத்தின் நாயகி
1. சீதை 2. திரௌபதி 3. மண்டோதரி 4. சாவித்திரி

25. எள் சாதம் நைவேத்தியம் செய்து வழிப்படப்படுபவர்.
1. சூரியன் 2. வைரவர் 3. சனிச்சரன் 4. மதுரைவீரன்

26. ''அமுத சுரபி'' என்ற பெயரிலான அன்னதான மடம் அமைந்துள்ள ஆலயம்.
1. நயினை நாக பூசணி 2. மண்டூர் முருகன்
3. கதிர்காமம் 4. நல்லூர்

27. சேத்திர பாலகர் என்று அழைக்கப்படுபவர்.
1. சண்டேசுவர் 2. வைரவர் 3. வீரபாகு 4. நந்தி

28. சுயம்புலிங்கப் பிள்ளையார் வீற்றிருந்து அருள் பாலிக்கும் ஆலயம்.
1. முன்னேச்சரம் 2. களுதாவளைப் பிள்ளையார்
3. செல்வச் சந்நிதி 4. தாந்தாமலை முருகன்

29. ''தமிழ் ஆகமம்'' என்று போற்றப்படுவது.
1. தேவாரம் 2. திருப்பல்லாண்டு 3. திருமந்திரம் 4. திருப்புகழ்

30. திருப்பாவை விரதம் வரும் மாதம்
1. சித்திரை 2. ஐப்பசி 3. கார்த்திகை 4. மார்கழி

31. திருப்பல்லாண்டு எத்தனையாந் திருமுறையில் அடங்கும்.
1. 06 2. 10 3. 9 4. 11

32. சௌசத்துக்குப் பின் செய்யத்தக்கது.
1. ஸ்நானம் 2. அனுட்டானம் 3. போசனம் 4. தந்தசுத்தி

33. சுந்தரமூர்த்தி நாயனாரின் குருபூசைத் தினம்
1. வைகாசி மூலம் 2. சித்திரை சதயம்
3. ஆடிச்சோதி 4. ஆனிமகம்

34. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தைத் தொகுத்தவர்.
1. நம்பியாண்டார் 2. ஸ்ரீமத்நாதமுனி
3. மெய்கண்ட தேவர் 4. பேயாழ்வார்

35. ''பரமசமய கோளரி'' என்று அழைக்கப்படுபவர்.
1. சிவபெருமான் 2. வீரபாகு
3. ஞானசம்பந்தர் 4. ஆறுமுக நாவலர்

36. ஸ்நானத்துக்குப் பின் செய்யத்தக்கது.
1. சௌசம் 2. போசனம் 3. சயனித்தல் 4. அனுட்டானம்

37. திரோபவம் என்பது எதனைக் குறிக்கிறது.
1. படைத்தல் 2. காத்தல் 3. மறைத்தல் 4. அருளல்

38. ''இந்து மக்களுக்கு ஒரு கையேடு'' எனும் நூலை வெளியிடும் நிறுவனம்.
1. விவேகானந்த சபை 2. இந்து மாமன்றம்
3. சைவ பரிபாலன சபை 4. நாவலர் சபை

39. வெள்ளி விழா எத்தனையாம் ஆண்டு நிறைவு விழா.
1. 50 2. 60 3. 25 4. 10

40. "பிராமணத் தீவு" என்று குறிப்பிடப்படும் ஆலயம்
1. மண்டூர் முருகன் 2. நயினை நாகபூசணி
3. முன்னேச்சரம் 4. காரைநகர் சிவன்

(40 புள்ளிகள்**)**

பகுதி - II
எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. நாடோறும் நியமமாக எந்த நேரத்திலே நித்திரை விட்டெழுதல் வேண்டும்?
2. சிவ சின்னங்கள் எவை?
3. நரிகளைப் பரிகளாக்கி இறைவன் மாணிக்கவாசகரைச் சிறைமீட்ட நாள் எது?
4. மயில்வாகனம் என்ற இயற்பெயர் கொண்டவர் யார்?
5. தமிழாகமம் என்று சிறப்பிக்கப்படும் நூல் எது?
6. ''துணிவளர் திங்கள்'' என்ற பதிகத்தைப் பாடியவர் யார்?
7. அதிகாலையில் இறைவனைத் துயில் எழுந்தருளச் செய்யப் பாடப்படும் பாடல் எது?
8. எமது நாட்டில் புழக்கத்தில் உள்ள பஞ்சாங்கங்களின் பெயர்களை தருக?
9. கதிர்காமக் கோவிலில் பூசை செய்யும் பூசகர் எப்பெயரால் அழைக்கப்படுவர்?
10. வைணவர்களால் மார்கழியில் அனுட்டிக்கப்படும் விரதம் எது?

(10 x 2 = 20 புள்ளிகள்**)**

2. பின்வரும் குறட்பாக்களுள் எவையேனும் நான்கினை எழுதுக.

1. “துறந்தாரின் தூய்மை.....”
2. “அவ்விய நெஞ்சத்தான்.....”
3. “அறன் அறிந்து வை .....”
4. “ஏதிலார் குற்றம் போல்.....”
5. “பொருள் தீர்ந்த பொச்.....”

(4x1 = 4 புள்ளிகள்**)**

3. பின்வரும் திருப்பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது எழுதி அதன் பொழிப்புரையையும் எழுதுக.

1. “நாம் ஆர்க்கும்.....”
2. “அந்தணாளன் உன்.....”
3. “தந்தது உன் தன்னை.....”
4. “கற்றவர் விழுங்கும்.....”

(2 x 6 = 12 புள்ளிகள்**)**

பகுதி - III

பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றுக்கு விடை தருக.

1. ‘‘ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லார்க்கு”

அ. கடவுள் எதற்காகப் பரம்பொருள் என அழைக்கப்படுகிறார்?

ஆ. இறைவனின் எண் குணங்கள் எவை?

இ. இறைவனின் ஐந்தொழில்களையும் எவ்வாறு அழைப்பர்?

(8 புள்ளிகள்**)**

2. ‘‘வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல் ஓதும்”

அ. அட்டாங்க யோகம் என்றால் என்ன?

ஆ. இருக்கு வேத சங்கிதையிலே உள்ள பாடல்களில் புகழ்ந்து பாடப்படும் தெய்வங்கள் எவை?

இ. பிராமணங்கள் என்றால் என்ன?

(8 புள்ளிகள்**)**

3. ‘‘கடவுள் எப்போதும் இரக்கம் வடிவாய்த் திகழ்பவர்”

அ. சிவனடியார்களை வழிபட்டு வீடுபேறு எய்தியவர்கள் பெயர்களை தருக.

ஆ. சனீஸ்வர வழிபாட்டுக்கான நாள் எந்த மாதத்தில் வரும் சனிக்கிழமை சிறப்பிடம் பெறுகிறது?

இ. இந்து சமயத்தின் முதல் நூல்களாகப் போற்றப்படுபவன எவை?

(8 புள்ளிகள்**)**

4. ‘‘மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால்”

அ. கந்தசஷ்டி விரதத்துக்குரிய நியதிகள் யாவை?

ஆ. விரதம் அனுட்டிப்பதால் நாம் அடையும் நன்மைகள் எவை?

இ. வைரவருக்குரிய விசேட தினங்களை தருக.

(8 புள்ளிகள்**)**

5. ‘‘காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி”

அ. திருஞானசம்பந்தர் ‘‘ஆளுடைய பிள்ளையார்” என்று ஏன் அழைக்கப்பட்டார்?

ஆ. அப்பர் சுவாமிகள் இடத்தில் விளங்கிய அற்புதங்கள் யாவை?

இ. தேவார முதலிகள் முதன் முதலில் பாடிய பதிகங்களையும் அவை பாடப்பட்ட சந்தர்ப்பங்களையும் தருக.

(8 புள்ளிகள்**)**